
# 11 முன்பிள்ளைப் பருவத்தின் விருத்தி





## முன்பிள்ளைப் பருவத்தினரின் வளர்ச்சி



உரு 11.1

பிறந்தது முதல் இரு வருடங்களுக்குள் ஏற்படும் குழந்தையின் வளர்ச்சியையும் குணப்பண்புகளையும் கற்ற நீங்கள், இப்பொழுது, முன்பிள்ளைப்பருவப் பிள்ளையின் வளர்ச்சி பற்றிக் கற்கப் போகிறீர்கள்.

2 வயது தொடக்கம் 5 வயது வரையான பருவமே முன்பிள்ளைப்பருவம் எனப்படும்.முதல் இரு வருடங்களிலும் ஏற்பட்ட அதிவேகமான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, முன்பிள்ளைப் பருவத்தில் உடல் வளர்ச்சி வேகம் குறைவாகும். உடலின் சமநிலையற்ற தோற்றம் ஓரளவுக்குக் குறைகின்றது. பிள்ளை மிகவும் துடிப்புள்ளதாய் இருக்கும். நடத்தல், ஓடுதல், பாய்தல் போன்ற இயக்கத்திறன்கள் அதிகரிக்கும்.

தமது உடலைக் கட்டுப்படுத்திக்கொள்ளக்கூடிய அவர்கள், இப்போது சுற்றுச் சூழலை ஆய்வு செய்வதற்கும் ஆயத்தமாவர்.

தன்னைச் சுற்றியுள்ள சூழல் எத்தகையது, அங்கு நடைபெறுவன என்ன, அச்செயற்பாடுகள் ஏற்படுவது எவ்வாறு, தான் அதிலொரு பகுதியாவது எப்படி, என்பன போன்ற அதிகமான வினாக்களுக்கு விடை தேடும் அவர்கள், உயிருள்ள உயிரற்ற அனைத்தையும் ஆராய்வதில் ஈடுபடுவார்கள். உடல், உளத் திறன்களில் முன்னேற்றத்தைக் காட்டுவர்.

## உடல் வளர்ச்சி

உடல் வளர்ச்சி முதல் இரு வருடங்களையும் விடக் குறைவான வேகத்தில் இருக்கும். உயரம் கூடுதல் முறையாக நடைபெறுகின்றது. முன்பிள்ளைப் பருவம் முடியும்போது, சாதாரண பிறப்புநிறை ஏழு மடங்காக அதிகரிக்கும்.

இப்பருவத்தில், பிழையான உணவுப் பழக்கத்தினால் கலோரிப் பெறுமானம் அதிகரித்து, உடல் நிறை தேவையற்று அதிகரிக்கலாம்.

உடல் வளர்ச்சி விசேட தன்மை கொண்டது. குழந்தைத் தோற்றம் நீங்கி, உடற்பகுதிகள் விகிதாசாரத்திற்கு ஏற்ப வளர்ச்சியடையும்.

**தலை** வளர்ச்சிவேகம் உடம்பின் ஏனைய உறுப்புகளை விடக் குறைவானது. மிகவும் மென்மையான தலைமயிர் சிறிது தடித்துக் கருமையடையும். மூக்கு சிறியதாயும், தட்டையாயும் காணப்படும். சிறிய வாயில் பாற்பற்கள் காணப்படும். தாடையின் வளர்ச்சியினால் நாடிப்பகுதி தெளிவாகக் காணப்படும்.

**உடல்** வட்ட அமைப்பான மார்புப் பகுதியும் முன்தள்ளிய வயிற்றுப் பகுதியும் காணப்படும். இப்பருவம் முடியும்போது, தோள்பகுதியும் தெளிவான இடையமைப்பும் தட்டையான வயிற்றுப் பகுதியும் ஏற்படுகின்றது.

**உடல் உறுப்புகள்** உடல் உறுப்புகள் பெரிதாகும். கை, கால்கள் நீளமாகும். சிறப்பான பாத அமைப்பு ஏற்படும். முன்பிள்ளைப் பருவம் ஆரம்பமாகும் காலத்திலேயே பாற்பற்கள் 20 தோன்றுகின்றன. முன்பிள்ளைப் பருவம் முடியும்போது பாற்பற்கள் விழுந்து நிரந்தரமான பற்கள் வளர்ச்சியடையத் தொடங்கும். என்புகளின் சீரான இயக்கத்தினால் அவை உறுதியடைகின்றன.

**உடல் வளர்ச்சியில்,**

- **போசணை**
- **உடற்பயிற்சி**
- **சுகாதார நிலை**
- **பரம்பரை**

**போன்றவை செல்வாக்குச் செலுத்துகின்றன.**

உடல் வளர்ச்சியுடன் அதிகளவில் தொடர்பைக் காட்டும் இயக்க வளர்ச்சி பற்றி நாம் கலந்துரையாடுவோம்.

## இயக்க வளர்ச்சி

முன்பிள்ளைப்பருவத்துப் பிள்ளைகளின்,

- ஓடும், பாயும் முறை
- உணவு உண்ணும் முறை
- பந்தைப்பிடிக்கும் முறை
- சிறியபொருள்களைப் பொறுக்கும்முறை

போன்ற செயற்பாடுகளை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள்.



உரு 11.2

ஆரம்பத்தில் இச்செயல்களைச் செய்யும்போது, அவர்களின் அசைவில் பழக்கமின்மை, பொருத்தமின்மை, முறையற்ற தன்மை இருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். முதிர்ச்சியுடன் பிள்ளையில் ஏற்படும் மாற்றம், இயக்க வளர்ச்சியில் பிரதானமாகச் செல்வாக்கைச் செலுத்துகின்றது. முன்பிள்ளைப்பருவம் பல்வேறு திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகும் பருவமாகும். பிள்ளைக்குச் சந்தர்ப்பம், ஆலோசனை, பயிற்சி என்பனவற்றை வழங்குவதன்மூலம் செயற்பாடுகளில் தேர்ச்சியை மிக விரைவாகவும் வினைத்திறனுடனும் பெற்றுக் கொடுக்கலாம்.

முன்பிள்ளைப்பருவம் பல்வேறு திறன்களைக் கற்றுக்கொள்ளப் பொருத்தமான பருவமாகும்.

எந்த ஒரு செயற்பாட்டையும் நன்கு செய்வதற்குரிய முயற்சியும் மீண்டும் மீண்டும் ஒரே செயற்பாட்டைச் செய்வதனால் பெறும் பயிற்சியும் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவும். ஓடுதல், பாய்தல் போன்ற செயற்பாடுகளில் மீண்டும், மீண்டும் ஈடுபட அவர்கள் முன்வருவர். மெல்லிய தசை இழையங்களின் வளர்ச்சி ஏற்படுவது பெரியதசை இழையங்களின் வளர்ச்சியின் பின்பு ஆகும். விரல் நுனியினால் பிடிக்கும் திறன் தாமதிப்பது இதனாலேயேயாகும். அவர்களின் திறன்கள் பல கீழே குறிப்பிடப்படுகின்றன.

- தனது நாளாந்தச் செயற்பாட்டில் ஈடுபடல்
- சப்பாத்தின் நூலைக் கட்டல்
- பந்தைப் பிடித்தல், வீசுதல் ஓடுதல், பாய்தல், கெந்திப் பாய்தல், முச்சக்கரவண்டி மிதித்தல்
- செயற்கைக் களிமண் (Clay) உபயோகித்து ஆக்கங்களை உருவாக்கல்
- கத்தரிக்கோலால் வெட்டல்
- சித்திரம் வரைதலும், நிறம் தீட்டலும்
- அடிப்படை எழுத்துத்திறன்
- சந்தத்திற்கு ஏற்ப நடனமாடல்









உரு 11.3

பிள்ளையின் இயக்க வளர்ச்சிக்கு உதவக்கூடிய காரணிகள் பலவுள்ளன.

- வயதுக்குப் பொருத்தமான அனுபவத்தைப் பெற்றுக் கொடுத்தல்
- சிறந்த பயிற்சியை வழங்குதல்
- பாதுகாத்தல் - இடம், உபகரணம், விளையாட்டுப் பொருள்கள்
- பொருத்தமான விளையாட்டுப் பொருள்களைப் பயன்படுத்துதல்
- பிள்ளையை முயற்சி எடுக்கச் செய்தல்
- பிள்ளையின் திறன்களை வளர்ப்பதற்காக ஊக்கமளித்தல்
- தனியாள் வேறுபாட்டை இனங்காணல் - சமவயதாயினும் செயற்பாடுகளில் ஈடுபடும் திறன் வேறுபட்டது.

மேற்குறிக்கப்பட்டுள்ள கருத்துகளில் அவதானத்தைச் செலுத்தினால் இயக்க வளர்ச்சியில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

# மனவெழுச்சி வளர்ச்சி

மனதுக்குள் எழும் உணர்வுகளின் போராட்டமே மனவெழுச்சி என இனங்காணப்படுகின்றது. இவற்றில் நேரான மனவெழுச்சிகளாவன:

- மகிழ்ச்சி
- அன்பு
- கருணை
- விருப்பு

எதிரான மனவெழுச்சிகளாவன:

- பயம்
- கோபம்
- பொறாமை
- பிடிவாதம்

முன்பிள்ளைப்பருவத்துப் பிள்ளையிடம் நேரான, எதிரான மனவெழுச்சிகளைக் காணமுடிகிறது. அவர்கள் காட்டும் மனவெழுச்சிகள் கீழே காணப்படும் பண்புகளின் மூலம் வெளிக்காட்டப்படுகின்றன.

- உணர்வுகளை உடனுக்குடன் வெளிக்காட்டல்
- இயல்புநிலை அடிக்கடி மாறுபடுதல்
- விரைவு (வேகம்)
- தீவிரமும் உக்கிரமும்
- கட்டுப்பாடின்மை

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையத்திற்கு (முன்பள்ளி) முதன்முதலில் சென்ற தினத்தை நினைத்துப் பாருங்கள். தாயையும் குடும்பச் சூழலையும் விட்டுப் பிரிவதால் கடுமையான மனவெழுச்சிக்கு உட்பட்டிருப்பதை இது காட்டுகிறது.

பிள்ளைக்கு பெற்றுக் கொடுக்கும் அனுபவம், வாழும் சூழல், குடும்பத்தினர் வழங்கும் கணிப்பு என்பவற்றிற்கேற்ப வெளிக்காட்டப்படும் மனவெழுச்சியும் அதன் தன்மையும் வேறுபட்டிருக்கும். அது போன்றே தனியாள் வேறுபாடும் மனவெழுச்சியில் செல்வாக்குச் செலுத்தும்.

## மகிழ்ச்சி


உரு 11.4

முகம் முழுவதும் பிரகாசமாயிருத்தலும் கைகொட்டி வாய்விட்டுச் சிரித்தலும் பிள்ளையிடம் பிரதிபலிக்கும் மகிழ்ச்சி என்னும் விரும்பத்தக்க ஒரு மனவெழுச்சியாகும். முன்பிள்ளைப் பருவத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவது மிக இலகுவாகும். விருப்பமான பொருளைப் பெற்றுக்கொடுத்தல், அன்பு, கருணை காட்டுதல், மனங்கவரக் கூடியவற்றைக் காட்டுதல், வேடிக்கையான விநோத ஒலி எழுப்புதல், நடிப்புகள் போன்றன பிள்ளைக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

எந்தவொரு செயற்பாட்டையும் நிறைவுசெய்வதும் பிள்ளையின் மகிழ்ச்சிக்குக் காரணமாகின்றது. அன்பு, கருணை, விருப்பு என்பன பிள்ளையிடம் பிரதிபலிக்கும் ஏனைய விரும்பத்தக்க மனவெழுச்சிகள் ஆகும்.

உயிருள்ளது, உயிரில்லாதது எனக் கவனியாது அன்பு காட்டுதல். அதேபோல், தமக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் தருபவற்றில் அன்பும் ஆதரவும் காட்டுதல் என்பன முன்பிள்ளைப்பருவத்தினரின் பண்புகளாகும். மேலும், தமக்கு அதிக அன்பையும் ஆதரவையும் காட்டுபவர்களில் அதிக அன்பை வெளிக்காட்டுவர்.

## கோபம்

மிகவும் விரும்பத்தகாத மனவெழுச்சியே கோபம். முன்பிள்ளைப்பருவத்தில் பிள்ளை, கோபத்தைக் காட்டும் சந்தர்ப்பங்கள் அநேகம் உள்ளன. மகிழ்ச்சியில்லாத எச்சந்தர்ப்பத்திலும் கோபத்தினை வெளிக்காட்டுவர்.

உணவு உட்கொள்ளல், ஆடை அணிதல், விளையாடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும்போது மகிழ்ச்சியற்ற நிலை காணப்படுமாயின் அது பிள்ளையில் கோபத்தை ஏற்படுத்தும். கோபமானது சில சந்தர்ப்பங்களில் அவதானத்தைப் பெற்றுக்கொள்ள பிள்ளை கையாளும் ஓர் உபாயமாகும். மூன்று வயதைத் தாண்டும்போது ஆண்பிள்ளையை விட, கோபத்தைக் கட்டுப்படுத்தும் திறன் பெண்பிள்ளையிடம் காணப்படும்.

## பயம்




உரு 11.5

முன்பிள்ளைப் பருவத்துப் பிள்ளையிடம் பயம் ஏற்படுவதற்குக் காரணங்கள் பல உள்ளன.

- பாவனை செய்தல் - விலங்கொன்று போல அல்லது பயங்கரச் சத்தமெழுப்பிப் பாவனை செய்தல்.
- ஏதாவது பயங்கரமான ஒரு நிகழ்ச்சியை ஞாபகத்திற்கு கொண்டு வருதல் - இருட்டின் போது விழுந்து காயமுற்றமை
- விருப்பமில்லாத அனுபவங்களால் ஏற்படும் தாக்கங்கள் - திடுக்கிடும் கனவு,
- பய உணர்வை ஏற்படுத்தும் கதைகளைச் செவிமடுத்தல்,
- பிள்ளையின் பாதுகாப்புக்காகப் பயத்தை ஏற்படுத்தும் முறையில் பலவற்றைக் கூறல்.

பிள்ளையின் பயத்தை நீக்குவதற்கு, பிள்ளையை விளங்கிக்கொள்வதும் பயத்தை நீக்கும் அனுபவங்களைப் பெற்றுக்கொடுப்பதும் முக்கியமாகும்.

## பொறாமை

தமது குடும்பத்திற்கு புதிய அங்கத்தவர் ஒருவர் சேரும்போது (குழந்தை பிறத்தல்), முன்பிள்ளைப்பருவப் பிள்ளை அதிகோபத்தை வெளிப்படுத்தும். இவ்வியல்பு பொறாமை என இனங்காணப்படும்.

- தமக்கு செய்தவற்றைச் செய்வதில் பிறரின் அவதானம் குறைதல்
- தமது தேவைகளை பிறர் நிறைவேற்றாமை
- தம்மை விட ஏனையவர்களுக்கு பிறர் நன்மை செய்தல்

போன்றன பிள்ளைகளுக்கு பொறாமை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களாகும்.

பொறாமையை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களைத் தடுத்துக்கொள்வதே மிக முக்கியமாகும். குடும்பத்தில் சேர்ந்த புது அங்கத்தவர், தமது குடும்பத்தவர் என்ற உணர்வை ஏற்படுத்திக்கொள்ளல், முடியுமான சந்தர்ப்பங்களில் பிள்ளையின் செயற்பாட்டின்போது பிள்ளைக்கு ஒத்துழைத்தல், விசேடமாக தாயின் அன்பு, ஆதரவு என்பவற்றை குறையாமல் பெற்றுக் கொடுத்தல் என்பன பொறாமையைக் குறைக்கக்கூடிய வழிமுறைகளாகும்.

## நுண்ணறிவு வளர்ச்சி



உரு 11.6

முன்பிள்ளைப் பருவத்தினரின் பழக்கவழக்கங்கள், திறன்கள் அனைத்திலும் நுண்ணறிவு வளர்ச்சி செல்வாக்குச் செலுத்துகின்றது. தமது உடல் பற்றியும், சுற்றியுள்ள சூழல் பற்றியும் விளங்கிக்கொள்வதற்கு ஒருவரின் நுண்ணறிவு உதவுகின்றது.

நுண்ணறிவு வளர்ச்சியில், பரம்பரையலகுகளின் செல்வாக்கினால் நுண்ணறிவுப் பண்புகள் முன்னேற்ற மடையும்போது, சூழலும் அதனால் கிடைக்கும் அனுபவமும் அதில் செல்வாக்குச் செலுத்தும். முன்பிள்ளைப் பருவத்தில் பிள்ளையின் நுண்ணறிவுத் திறன் எவ்வாறு இருக்கும் என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

**முன்பிள்ளைப் பருவத்துப் பிள்ளைகள்**

- உயிருள்ளவற்றையும் உயிரில்லாதவற்றையும் வேறுபடுத்தி இனங்காண்பர்.
- நான்கு கால் விலங்கொன்றை ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காண்பதுடன் தம்முடன் நெருங்கும் அன்புக்கேற்ப அவ்விலங்குகளை வகைப்படுத்துவர்.
- நல்லது, கெட்டது என்ற எண்ணக்கரு ஏற்படுவது பொருள்கள், உயிரிகள் போன்றவற்றை இனம் கண்டதன் பின்னரேயாகும்.
- காலம், தூரம், அளவு, எண்ணிக்கை, நிறை போன்ற எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வது கடினமாகும்.
- அவதானத்திற்குட்படும் ஒளிக்கும் இருளுக்கும் ஏற்பவே காலை, மாலை, இரவு என்பவற்றை விளங்கிக்கொள்வர்.
- மனதால் கற்பனையில் காண்பவற்றை உண்மையென முன்வைப்பர்.
- ஞாபகசக்தி (திறன்) மிக முன்னேற்றம் அடைந்திருக்கும். எழுத்துகள் தெரியாவிடினும் புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டி பாட்டு, கதை போன்றவற்றை கூறுவர்.
- ஆக்கத் திறனை வெளிக்காட்டுவர், பாட்டு, கதை என்பவற்றை புனைவதில் திறமை உள்ளவர்கள். ஏனையவர்களைப் போன்று பாவனைசெய்து அனுபவத்தைப் பெறுவர்.
- விளையாட்டாக வீட்டில் காட்டும் நடிபங்குகள் பெரும்பாலும் குடும்ப அங்கத்தவர்களின் இயற்கைத் தன்மையை முன்வைக்கும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளாகும்.

**தான்வாழும் சூழலை விளங்கிக்கொள்ளும் திறனும் அங்கு வாழ்வதற்காக ஒத்துப்போகக்கூடிய திறனும் நுண்ணறிவு வளர்ச்சியினால் ஏற்படும். கற்கும்திறனும் ஆக்கத்திறனும் சிந்தனைத் திறனும் நுண்ணறிவு வளர்ச்சியை வகுத்துக் காட்டும் துறைகளாகும்.**

பிள்ளையில் ஏற்படும் ஆராய்ந்து அறியும் ஆர்வம் நுண்ணறிவு வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும். அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு உண்மையான விடைகளைப் பெற்றுக் கொடுத்தலும் ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்தலும் மிக முக்கியமாகும். வீட்டினுள்ளேயும் வீட்டுத் தோட்டத்திலும் பிள்ளைக்குப் பாதுகாப்பான முறையில் பொருள்கள், தாவரங்கள், விலங்குகள் போன்றவற்றை அவதானிக்கவும் அவற்றைப் பரீட்சித்துப் பார்க்கவும்கூடியதாக அனுபவத்தைப் பெற்றுக்கொடுப்பது முக்கியமாகும்.

# மொழி வளர்ச்சி



உரு 11.7

சொற்கள் சிலவற்றைச் சமிக்ஞைகளாக முன்வைத்து, தனது தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் பிள்ளையின் மொழி வளர்ச்சியில், வேகமான வளர்ச்சி ஒன்றை முன்பிள்ளைப் பருவத்தில் காணலாம். சுமாராக 100 சொற்களைக் கதைத்த பிள்ளைகள், 2000 அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களைக் கதைக்கும் திறனைப்பெறுவர். தமது சூழலிலுள்ள உயிருள்ளவற்றையும் உயிரில்லாதவற்றையும் பெயரால் இனங்காணும் திறனைப் பெறுவர்.

வாக்கியங்களைப் பேசுவதற்குரிய திறனைப் பெறுவர். முறையாக கதைப்பதற்குப் பதிலாக பெயர்ச்சொல், வினைச்சொல், விசேட சொற்கள் என்பவற்றை அமைத்துக் கதைப்பர். வினாக்களைக் கேட்பதற்கும் ஆம், இல்லை என்ற எண்ணக்கருவை உரிய முறையில் பயன்படுத்தவும் பழகுவர். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றிய தெளிவு குறைவானாலும் கதைக்கும் போது அந்த வினைச்சொற்களை அமைத்துக் கதைப்பர். எண்ணிக்கை பற்றிய எண்ணக்கரு முழுமையடையாவிட்டாலும் எண்ணும் திறனைப் பெறுவர்.

மொழி உச்சரிப்பு முன்னேற்றம் அடையும். சில சொற்களை உச்சரிக்க முடியாதிருந்தால் கதைப்பதில் சிறிது குறைபாடு பிரதிபலிக்கும். "ர" என்ற எழுத்துக்குப் பதிலாக "ல" என்று உச்சரித்தலும் கூட்டுச்சொற்களை உச்சரிக்கச் சிரமப்படுதலும் இப்பருவத்தின் சாதாரண பண்பாகும். எழுத்துகளை மாற்றி உச்சரித்தலைப் பொதுவாகக் காணலாம். வசனங்களின் தெளிவின்மையை சில நேரங்களில் காணலாம். வசனங்கள் அல்லது எழுத்துகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்தல், தெளிவாக வசனம் உச்சரிக்க முடியாமை என்பவற்றையும் சில பிள்ளைகளில் காணமுடிகின்றது. முறையாகவே இந்நிலையில் இருந்து விடுபடுவதற்குள் பேச்சுத் தடை (திக்கிப்பேசுதல்) நிலைமை ஏற்படச் சந்தர்ப்பம் இருப்பதனால் அது பற்றி அவதானமாயிருப்பது முக்கியமானதாகும்.

பிள்ளையின் மொழிவளர்ச்சியில் பரம்பரையலகினால் கிடைக்கும் நுண்ணறிவுத்திறனும் சூழல் தன்மையும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

- பிள்ளைக்குக் கிடைக்கும் வேறுபட்ட அனுபவங்கள்
- பிள்ளைக்குப் பெற்றுக் கொடுக்கும் போசணை
- சூழலின் தன்மை, பல அனுபவங்கள், வீட்டிற்கு வெளியிலான தொடர்புகள்
- திரும்பத்திரும்ப அனுபவங்களைப் பெறல்
- மனவெழுச்சிகளின் தன்மையும் மனவெழுச்சிகள் பிரதிபலிப்பதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதலும், பழக்கவழக்கங்களில் மட்டுமன்றி கதைக்கவும், கோபம், அன்பு போன்றவற்றைக் காட்டவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்
- ஆக்கபூர்வமான திறன்களில் ஈடுபட - கதை, நடிப்பு, பாட்டு, கவிதை போன்றவற்றை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.

மொழிவளர்ச்சிக்கு உதவக்கூடியதாக சூழலைத் தயார்ப்படுத்த வேண்டியது பெரியவர்களது பொறுப்பாகும். பிள்ளையுடன் அடிக்கடிப் பேசுவதற்கு குடும்பத்தவர்கள் முயற்சிப்பது முக்கியமானதாகும். அதேபோன்று, பிள்ளையின், நுண்ணறிவு மட்டமும் மொழி வளர்ச்சியில் பெரும் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கலாம். எனவே, நுண்ணறிவு வளர்ச்சிக்குப் பொருத்தமான செயற்பாடுகளை வழங்குவதன்மூலம் மொழிவளர்ச்சிக்கு உதவமுடியும்.

## சமூக வளர்ச்சி



உரு 11.8

குழந்தைப்பருவத்தைத் தாண்டிய பிள்ளையின் சமூகமானது, குடும்பமும் அதனைச் சூழவுள்ள சூழலும் ஆகும். முறையாக முன்பிள்ளைப் பருவத்தை ஆரம்பித்த பிள்ளையை, முன்பள்ளியில் சேர்த்தல் மூலம் அவனது சமூகம் விரிவு படுகின்றது. இந்தப் புது அனுபவத்திற்கு முகங்கொடுக்கும்போது பிள்ளைக்கு ஒரு சிக்கல் நிலை மேலெழுகின்றது. முன்பள்ளியில் முதலாம் தவணைக்குள் பிள்ளையின் வெளிப்பாடுகளை ஞாபகப்படுத்துங்கள். கண்ணீர் நிறைந்து, மிக்க துக்கத்தில் பிள்ளைகள் அழுவது பொதுவானதல்லவா? பெற்றோரின் பாதுகாப்பிலிருந்த அவர்கள், புதிய அனுபவத்திற்கு முகங்கொடுக்கும்போது வெளிக்காட்டும் நிலைப்படுத்தப்படாத மனவெழுச்சியின் வெளிப்பாடே அதுவாகும். பிள்ளையின் சமூகச் செயற்பாடுகளுக்காக வீட்டினுள் அனுபவங்கள் கிடைத்திருக்குமாயின் சமூகத்துடன் சேர்வது இலகுவாகும்.

முன்பள்ளியிலும் வீட்டிலும் சுற்றுப்புறச் சூழலிலும் பிள்ளையை அவதானிக்கும்போது, அவர்களின் பழக்கவழக்கங்களை அறிந்துகொள்ளலாம்.

- ஏனையவர்களுடன் கலந்து செயற்படாமை
- விளையாட்டுப் பொருள்கள் அனைத்தையும் தமக்கே உரிமையாக்கிக் கொள்ள முயற்சித்தல்
- தம்மீது ஆசிரியரின் அவதானத்தை ஈர்ப்பதற்கு முயற்சித்தல். இவ்வாறான எதிர்மாறான நடத்தைக் கோலங்களை சமூகத்திற்கு பொருத்தமானதாக மாற்றிக்கொள்ள வேண்டும்.
- பக்கத்திலிருக்கும் பிள்ளைகளுடன் சேர்ந்து செயற்படல்
- விளையாட்டுப் பொருள்கள், உணவு, பானம் போன்றவற்றைப் பகிர்தல்
- முன்வந்து கதைத்தல்
- ஆசிரியருக்கு உதவுதல்
- ஏனையோர்களுக்கு உதவுதல்
- உடல்நலமற்ற துக்கத்திலிருக்கும் நண்பர்களுக்கு உதவுதல் போன்றன,

அவர்கள் முறையாகச் சமூகத்தில் பழகும்போது காணக்கூடிய உயர்ந்த நடத்தைக் கோலங்களாகும்.

பிள்ளை, தன்னுடன் பழகுபவர்களைப் பின்பற்றுவதனால் சமூகத்திற்கு இசைவாக்கம் அடைகிறது. ஆசிரியர் சொல்வதையும், செய்வதையும் வீட்டில் முன்வைப்பதைக் காணலாம். அங்கு அவர்கள் ஆசிரியரைப் பாவனை செய்வதைத் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறாக, பிள்ளைக்கு சமூக இசைவாக்கம் கிடைக்கும். சூழல், பிள்ளைகளின் நடத்தைக் கோலத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்துவதைக் காணமுடிகிறது. எதிர்மாறான பண்புகளை நீக்குவது சமூக வளர்ச்சியில் முக்கியமானதாகும். ஒரு நபரை சமூகத்திற்கு இசைவாக்குவதற்கான பின்னணியைத் திட்டமிடுவது பெரியவர்களின் பொறுப்பாகும். பெரியவர்கள் மூலம் சமூகத்தில் கிடைக்கும் அனுபவத்திற்கேற்ப முன்பிள்ளைப்பருவத்தின் முடிவில் பிள்ளையின் எதிர்மறையான பண்புகள் குறைந்து சமூகத்திற்கு இசைவாக்கப்படுவது தெளிவாகின்றது.



## முன்பிள்ளைப்பருவத்தில் பிரதிபலிக்கும் நடத்தைப் பிரச்சினைகள்

குடும்பத்தில், அனைவரினதும் அன்புக்கும் கவனிப்பிற்குமுள்ளான செல்லப்பிள்ளையின் சில பழக்கங்களும் நடத்தைக் கோலங்களும் அனைவரினதும் கவலைக்குக் காரணமாக இருக்கலாம். முன்பிள்ளைப்பருவப் பிள்ளையிடம் காணப்படும் இது போன்ற ஒழுங்கீனமான நடத்தைக் கோலங்களை நடத்தைப் பிரச்சினைகள் எனலாம்.

- படுக்கையை நனைத்தல்
- விரல் சூப்புதல்
- எதையும் எதிர்க்கும் நடத்தை
- திக்கிப் பேசுதல்
- ஆவேசம்

போன்றன ஒழுங்கீனமான நடத்தைக் கோலங்களாகும். இவ்வொழுங் கீனங்கள் தற்காலிகமானவை. இவை பொதுவாக பிள்ளைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது. எனினும், சில வேளைகளில் இவை பிள்ளையில் உடல், உள, மனவெழுச்சித் தாக்கங்கங்களை ஏற்படுத்துகின்றன.

எனவே,

- அவற்றின் தன்மை
- ஏற்படுவதற்கான காரணங்கள்
- நீக்கிக்கொள்வதற்கான வழிமுறைகள்

போன்றன பற்றி ஆராய்ந்து பார்ப்பது பிள்ளைகளின் நலத்திற்கு அவசியமாகின்றது.

## படுக்கையை நனைத்தல்

நித்திரையின்போது தெரியாமலேயே சிறுநீர் கழித்தல், முன்பிள்ளைப் பருவத்தின் ஆரம்பத்தில் ஒரு சாதாரண நிகழ்ச்சியாகும். உடல் முதிர்ச்சியுடனும் முறையான பயிற்சியுடனும் கிரமமாக அந்நிலைமை இல்லாமல் போய்விடும். எனினும், 4 வயதாகும்போது படுக்கையை நனைப்பது தொடர்ந்திருந்தால் அதற்கான காரணத்தை அறிதல் முக்கியமாகும். பகற்காலத்தில் சிறுநீரைக் கட்டுப்படுத்தக்கூடிய சில பிள்ளைகள் இரவில் நித்திரையில் ஆழ்ந்திருக்கும்போது தமக்குத் தெரியாமலேயே படுக்கையை நனைக்கின்றனர்.

சிறுநீர் கழித்தலைக் கட்டுப்படுத்தும் பழக்கப்பயிற்சி இல்லாத பிள்ளையில் அந்நிலைமையைக் காணலாம். பிள்ளைகள் 4 வயதாகும்போது, படுக்கையை நனைத்தல் செயற்பாடு நிறுத்தப்பட்டு மீண்டும் சிறிது காலத்தில் அந்நிலைமை ஏற்படக்கூடும். பிள்ளைக்குத் துன்பத்தையும் சிக்கலையும் ஏற்படுத்தும் இவ் நடத்தைக்கான காரணங்களை அறிவோம்.

- பிள்ளையின் வளர்ச்சியில் ஏற்படும் தாமதம், விசேடமாக மொழிவிருத்தியில் ஏற்படும் தடை.
- கவலைகளுக்கு ஆளாதல்
- வீட்டிலும் முன்பள்ளியிலும் கடுமையான சட்டதிட்டங்கள்
- அன்பு, ஆதரவு காட்டுபவர்களின் வேறுபாடு
- சிறுநீர்த் தொகுதியில் ஏற்படும் நோய்

படுக்கை நனைத்தலை இல்லாமல் செய்வதற்குப் பொருத்தமான பரிகார முறைகளை அமைத்துக் கொள்வதற்கு அதற்குக் காரணமான காரணிகளை

விளங்கிக்கொள்ளல் வேண்டும். பிள்ளையின் உடல்வளர்ச்சியில் அல்லது மொழிவளர்ச்சியில் குறைபாடுகள் இருந்தால். அதற்குப் பொருத்தமான சிகிச்சையை அளித்தல் வேண்டும்.

பிள்ளையிடம் காணப்படும் விரும்பத்தகாத மனவெழுச்சிகளை அறிதல் வேண்டும்.

ஏதாவது ஒரு நிகழ்வுக்கோ, ஒருவருக்கோ பிள்ளை பயப்படல், தேவையில்லாது எச்சரித்தல், அன்பு, ஆதரவு குறைதல் போன்றவை பிள்ளையின் மனவெழுச்சியில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அக்காரணிகளால் பிள்ளை படுக்கையை நனைக்கின்றது. அதனால், அவ்வாறான நிலைமைகள் வீட்டிலேயோ, பாடசாலையிலேயோ, சூழலிலோ அல்லது அயலவர்களினாலோ ஏற்படுகின்றதா என அறிந்து அந்நிலைமைகளை நீக்கிக்கொள்ள வேண்டும்.

சிறுநீர்த் தொகுதியில் நோய் அல்லது நீரிழிவு நோய் போன்ற நோய் நிலைமை உண்டா எனப் பரிசோதித்து அதற்குப் பொருத்தமான சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்.

காரணம் எதுவாக இருந்தாலும் இந்நிலைமைகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

- பிள்ளையைக் குற்றஞ்சாட்டவோ, தண்டனை வழங்கவோ, வெட்கப் படுத்தவோ கூடாது.
- படுக்கையை நனைக்காத நாட்களில் அவர்களைப் பாராட்டுதல். இதனால், பிள்ளை பழக்கத்திலிருந்து விடுபட முயற்சி எடுக்கும்.
- நித்திரைக்குச் செல்ல முன்னுள்ள சில மணித்தியாலங்களுக்குள் பிள்ளை குடிக்கும் நீரின் அளவைக் குறைத்தல்.
- நித்திரைக்குச் செல்லும் முன், பிள்ளையை எழுப்பி சிறுநீர் கழிக்கவிடல்.

படுக்கையை நனைக்கும் நடத்தைக் கோலத்தை நிறுத்திக்கொள்ள எடுக்கும் நடவடிக்கைகளால் பிள்ளைக்கு மனவெழுச்சித்தாக்கம் ஏற்படாதவாறும் அசௌகரியத்தை ஏற்படுத்தாதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## திக்குதல்

முன்பிள்ளைப்பருவப் பிள்ளைகள் கதைக்கும் கோலத்தை நினைத்துப் பாருங்கள். சொற்களைத் தவறாயும் எழுத்துகளை உச்சரிக்கும்போது விட்டுவிட்டும் அவர்கள் பேசுவது அவர்களின் செல்லம் அதிகரிப்பதனாலல்லவா? அவ்வாறாயின் அத்தகைய தன்மையில் ஒழுங்கீனங்களைக் கவனிப்பது ஏன்?

திக்குதல் சில சமயம் வாழ்நாள் முழுவதும் காணப்படின் பல்வேறு உளத்தாக்கங்கள் ஏற்படலாம். சமூகத்துடன் இசைவாக்கமடைவதில் சிரமமும் வெட்கமும், தலைமை தாங்க முடியாமை, சமூகத்தில் பின்னடைதல் என்பனவற்றுக்கு சில சமயம் திக்குவதே காரணமாகின்றது. எனவே, திக்குதலை இல்லாமல் செய்வதற்குச் செயற்பட வேண்டும். திக்குவதற்கும் பல காரணங்கள் உள்ளன.

- பரம்பரை அல்லது பிறப்பினால்
- சூழல் காரணமாக - பின்பற்றுவதனாலும் தவறான அனுபவங்கள் மூலமும்
- விரைவாகக் கதைக்க முற்படல் - சுற்றுச் சூழல் தொடர்பாகப் பெரிய சந்தோசத்தை காட்டும் அவர்கள், ஒரே முறையில் பல கருத்துகளைச் சொல்ல முற்படும்போது
- கஷ்டத்துக்குள்ளாகும்போது
- இடக்கைப் பழக்கத்தை வலக்கைக்கு மாற்றும்போது
- மனவெழுச்சிக் காரணிகள்
- ஏதாவதொரு நிகழ்ச்சிக்கு அல்லது ஒருவருக்குப் பயப்படும்போது
- அன்பு காட்டுபவர்கள் திடீரென மாறும்போது
- தங்கை / தம்பி பிறப்பதனால்
- கடுமையான ஒழுக்கச் சட்டதிட்டங்கள்
- பெற்றோர்களிடையே ஏற்படும் மோதல்கள்
- முன்பள்ளிக்குச் செல்வதற்கு விருப்பமின்மை அல்லது பயம் ஏற்படல், புதிய சூழலில் ஈடுபட முடியாத நிலை

முன்பிள்ளைப் பருவத்தில் அதிகமான பிள்ளைகளில் திக்குதல், பல்வேறு முறையில் பிரதிபலிப்பதை விளங்கிக் கொள்வது, திக்குதலின் தன்மையை அறிந்து அவதானத்திலீடுபடல் என்பன முக்கியமாகும். அதேபோல், விரைவாகத் தீர்வுகாண வேண்டுமென்பதற்காக பலவந்தமாக திருத்த முயற்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். அல்லாவிடின் பிள்ளையின் அக் குறைபாடு வாழ்நாள் முழுவதும் நிலைத்துவிடலாம்.

பிள்ளைகள் சொற்களை உச்சரிக்கும் தன்மையைப் பலவந்தமாகத் திருத்துதல் சிறந்ததல்ல. சரியான சொற்களை கதைக்க வைத்தல் பிள்ளையின் திக்குதலை நீக்கிக்கொள்ள உதவும்.

திக்குதல் பற்றிப் பிள்ளையுடன் கதைப்பதால் ஏனையோர்களுடன் கலந்துரையாடவும் விடயங்களைக் கூறவும் கூடிய நிலையை ஏற்படுத்தலாம்.

திக்குவதற்கான காரணத்தை நுணுகி ஆராய்ந்து பிள்ளையிடம் அன்பைக் காட்டல், அவர்களுடன் அடிக்கடி கதைத்தல், விளையாடல், பயம் ஏற்படுவதைத் தடுத்தல் போன்ற முறையில் பிள்ளைகளுடன் பழகிச் செயற்படுவது முக்கியமாகும்.

## விரல் சூப்புதல்

நித்திரையில் விரலைச் சூப்பும் குழந்தைகளை நீங்கள் கண்டிருப்பீர்கள். பெருவிரலையோ அல்லது சிலவேளைகள் பல விரல்களையோ சூப்பும் பழக்கமுடைய பிள்ளை, அதனால், ஏதோவொரு திருப்திக்குட்படுவதைக் காணலாம்.



உரு 11.9

பிறந்த சிசுவும் விரல் சூப்புவதில் விருப்பத்தைக் காட்டும். ஆய்வுகளின்படி, பிள்ளை, கருப்பையினுள் இருக்கும்போதே விரல் சூப்பும் தன்மை உண்டென்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பிள்ளை விரல் சூப்புவதற்குக் காரணங்கள் பலவுள்ளன.

- பசி அல்லது தாக உணர்வு ஏற்படல்
- களைப்பு
- நித்திரை மயக்கம்
- விரக்தி அல்லது தனிமையில் இருத்தல்
- உடற் பலவீனம்
- விரும்பத்தகாத செயற்பாடுகள் ஏற்படுதல்
- மற்றவர்களின் நெருக்குதல்களுக்குத் தேவைக்கதிகமாக உள்ளாகுதல்

இந்த அனைத்துச் சந்தர்ப்பங்களின்போதும் பிள்ளை விரல் சூப்புவதன் மூலம் திருப்தியைப் பெற்றுக்கொள்கின்றது.

தாயின் பாலைக் குடித்தல், பாற்புட்டியில் பாலை உறிஞ்சிக் குடித்தல் என்பவற்றின் மூலம் திருப்திக்கு உள்ளாகும் பிள்ளைக்கு பாதுகாப்பு உணர்வு ஏற்படுகின்றது. பிள்ளை, பால் குடிக்காது சுதந்திரமாக இருக்க விரும்பும்போது, மேலே குறிப்பிட்டுள்ள எந்த அசௌகரியங்களையும் இல்லாமல் செய்யும் ஒரு வழியாக விரலைச் சூப்புகின்றது. அதனால், விரல் சூப்புவதன் மூலம் பிள்ளைகள் உளத்தேவைகளை நிறைவு செய்துகொள்வது தெளிவாகின்றது.

மனவெழுச்சி வளர்ச்சிக்கேற்ப அவற்றைக் கட்டுப்படுத்தும் திறனுக்கு உட்பட்ட பிள்ளைகள், விரல் சூப்புவதை முறையாக நிறுத்துவர். விரலை அடிக்கடி சூப்புவதனால் நோய்கள் ஏற்பட வழி ஏற்படுகின்றது.

விரல் சூப்புவதை நிறுத்துவதற்கு பிள்ளைமீது அன்பைக் காட்டுவதும் அவதானத்தைச் செலுத்துவதும் மிகவும் முக்கியமானதாகும்.

விரல் சூப்புதல் பற்றி எப்போதும் ஞாபகப்படுத்துதல், பிள்ளையை

கவலைக்குட்படுத்தல், தண்டனை வழங்கல், வெட்கப்படுத்தல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

பிள்ளையின் அவதானத்தை திசை திருப்புவது மிக முக்கியமாகும். பிள்ளையுடன் சேர்ந்து விளையாடல், அவசியமான விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பன விரல் சூப்புதலைத் தடுப்பதற்கு உதவியாகும் காரணிகளாகும்.

சூப்பி ஒன்றைச் சூப்பும் சந்தர்ப்பத்தில் அல்லது விரல் சூப்பும்போது கசப்பான ஏதாவது ஒரு பொருளை அதன்மீது பூசிக் கொடுப்பதால் அச் செயற்பாட்டைத் தடுத்துக்கொள்ளலாம் என்பது அவ்வளவு வெற்றிகரமானதல்ல.

## ஆவேசம்

தரையில் புரண்டு, சத்தமிட்டு, கைக்கு கிடைத்ததை எறிந்து, மூச்சை அடக்கி அழும் பிள்ளையை நீங்கள் கண்டிருப்பீர்கள். பிள்ளைகள் தமது மனவெழுச்சியை கட்டுப்படுத்திக்கொள்ள முடியாததன் வெளிப்பாடே இதுவாகும்.

முன்பிள்ளைப் பருவத்தின்போது விசேடமாகக் காணப்படும் இவ்வொழுங்கீனம் ஆவேசம் என இனங்காணப்படும். இரண்டு வயதாகும் போது தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் ஒரு தந்திரோபாயமாக ஆவேசம் பயன்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

ஒவ்வொரு பிள்ளையும் எந்த ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு செயற்படுகிறது என்பது நிரந்தரமாகத் தீர்மானிக்க முடியாததொன்றாகும்.

முன்பிள்ளைப் பருவத்துப் பிள்ளைகள்,

- விரக்தி அடையும்போது
- பசி அதிகரிக்கும்போது
- களைப்பு அதிகரிக்கும்போது
- பயத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதபோது
- உடல் பலவீனம் அடையும்போது
- அதிகளவில் குழப்பமடையும்போது

ஆவேசத்திற்கு உட்படுகின்றனர். பிள்ளைகள் கோபத்திற்கு உட்படும்போது, பெற்றோர்கள் குழப்பத்திற்கும் கோபத்திற்கும் உட்படுதல் சாதாரணமாகக் காணக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். இவ்வாறான பெரியோர்களின் பழக்கவழக்கங்கள் பொருத்தமற்றதாகும். ஆவேசத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கும் தடுத்துக்கொள்வதற்கும் பிள்ளைக்கு ஒத்துழைப்பு வழங்கலே

முக்கியமாகும். மேலும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிள்ளைக்கு விளக்கமளித்தல் பயனற்றதாகும்.

தண்டனை வழங்குதலுக்குப் பதிலாக அவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக்கொள்ளும் செயற்பாடே முக்கியமானதாகும். பிள்ளையின் தேவையற்ற கேள்விகளுக்கு இடமளிக்கக்கூடாது. அது போன்ற சந்தர்ப்பங்களில் அதிக அவதானத்தைக் காட்டாதிருப்பதால் பிள்ளை அவ்வுபாயத்தால் பயனில்லை என விளங்கிக்கொள்ளும்.

## மீளச்செய்தல்

பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமான நடத்தைக் கோலங்களுக்குப் பதிலாக, அதற்கு முந்திய வயதுமட்டத்தின் நடத்தைக் கோலங்களை மீண்டும் காட்டுவதே 'மீளச்செய்தல்'என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

மீளச்செய்தலுக்குப் பிரதான காரணமாக அமைவது குழந்தையின் மனவெழுச்சியில் நிலையற்ற தன்மை ஏற்படுவதே ஆகும். வீட்டுக்கு, புதிதாக பிறந்த குழந்தையைத் தாய் கொண்டு வரும்போது தாயினதும் ஏனையவர்களினதும் அவதானம் முழுவதும் அப்பிள்ளையிலேயே இருப்பதனால் பெரும்பாலும் மூத்தபிள்ளை இது போன்ற நிலையற்ற தன்மைக்கு ஆளாகின்றது.

- நன்றாக வசனங்களை உச்சரித்துக் கொண்டிருக்கும் பிள்ளை திக்குதல்
- படுக்கை நனைத்தலை நிறுத்தியுள்ள பிள்ளை மீண்டும் ஆரம்பித்தல்
- இயக்கத்திறனை மீண்டும் திறனின்றிக் காட்டல்
- நடந்து கொண்டிருந்த பிள்ளை தவழத் தொடங்குதல் போன்றன மீளச் செய்தலினாலேயே ஏற்படுகின்றது.

பிள்ளைக்கு மற்றைய நாட்களை விட அன்பு, ஆதரவு, பாதுகாப்பு உணர்வு ஏற்படக்கூடிய முறையில் பெரியவர்கள் செயற்படுவது முக்கிமானதாகும். பிள்ளையின் மனவெழுச்சியை மேலும் நிலையற்றதாக மாற்றுவதை நிறுத்துவது அவசியம். பிள்ளையை கடினமாகப் பேசுதல், வெட்கத்திற்கு உட்படுத்தல் போன்றவற்றால் இந்த ஒழுங்கீனத்தை மேலும் வலுவூட்டுவதை பெரியோர் தவிர்க்க வேண்டும்.

முன்பிள்ளைப் பருவத்தில் காணக்கூடிய மேலே கலந்துரையாடிய ஒழுங்கீனங்கள், அதிகளவில் அந்த வயதெல்லைக்குள்ளேயே முறையாக நீங்கும். பிள்ளையின் மனவெழுச்சி காரணமாக இவை ஏற்படுவதால், அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்கண்டு அதைத் தடுப்பதற்குச் செயற்படுவது பெற்றோர்களது பொறுப்பாகும்.



# முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் கடமைகள்

ஒருவரின் வளர்ச்சிச் செயற்பாடொன்றை கவனத்திற் கொள்ளும்போது முன்பிள்ளைப்பருவத்தினருக்கே விசேட இடம் கிடைக்கின்றது. இக்காலவரை யறையே வாழ்க்கையை மிகவும் தீர்மானிக்கக்கூடிய ஒரு பருவமாகக் கருதப்படுகின்றது. இப்பருவமே பிள்ளையின் மூளை வளர்ச்சியிலும் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. குழந்தைப் பருவத்தையும் பிள்ளைப் பருவத்தையும் இணைக்கும் இவ்வயதெல்லைக்குள், பிள்ளை நல்ல பழக்கங்களில் பயிற்சி பெறவும் கெட்ட பழக்கங்களிலிருந்து நீங்கிக்கொள்ளவும் முடிகின்றது. இப்பருவம், 2 - 5 வயது வரையான கால எல்லையே ஆகும். 2 அல்லது 2 ½ வயதாகும்போது முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்குச் செல்லும் பிள்ளைகளின் வளர்ச்சிச் செயற்பாட்டுக்கு அது உதவியாயிருக்கும்.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் கடமைகள் (செயற்பாடுகள்) பிள்ளைகளின் வயதுமட்டத்திற்கேற்ப வேறுபடும். 2 அல்லது 2 1/2 வருடத்திற்கு குறைந்த பிள்ளைகளுக்கு பகல், பராமரிப்பு நிலையமாக (பகல் நேரக் காப்பகம் - Day Care Centre) அது செயற்படும். அதனைவிட அதிக வயதையுடைய பிள்ளைகளுக்காக பல்வேறு செயற்பாடுகளைக் கொண்ட நிலையங்களும் இயங்குகின்றன.

நாம் முதலில் பகல் பராமரிப்பு நிலையத்தின் தன்மை பற்றிக் கலந்துரையாடுவோம். மிகவும் சிறுபிள்ளைகள்கூட இவ்வாறான மத்திய நிலையங்களில் சேர்ந்துள்ளனர். வீட்டில் வழங்கப்படும் முறையில் பாதுகாப்பும் அரவணைப்பும் இங்கும் கிடைக்கும். தொழில்துறைகளில் ஈடுபட்டிருக்கும் தாய்மார்களுக்கு இந்நிலையம் பெரிய சேவையைச் செய்கின்றது. ஒரு வயது நிறைந்த குழந்தைகள்கூட இந்நிலையத்தில் ஒப்படைக்கப்படுகின்றனர். இங்கு பிள்ளைகள் பேணிப் பாதுகாக்கப்படுவர். பிள்ளைக்குத் தேவையான பௌதிக, உளச் சூழலைக் கட்டியெழுப்பக்கூடிய இடமாகவும் இது அமைந்துள்ளது.

2 1/2 வயது தாண்டிய பிள்ளைகளுக்கு முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம் பரந்த கடமைகளை நிறைவேற்றுகின்றது. பிள்ளையின் முழு வளர்ச்சிக்கும் ஏற்றதாக இயங்குவதற்கு பல்வேறு செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர். நாம் இப்போது முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம் பற்றி நோக்குவோம்.

இவ்வாறான ஒரு நிலையத்திற்காக மனம் கவரக்கூடிய, நல்ல வளியோட்டமும் சூரிய ஒளியும் கொண்ட சூழலிலுள்ள ஒரு கட்டடத்தைத்

தெரிவு செய்தல் வேண்டும். பிள்ளைகளின் தொழிற்பாட்டிற்காக இடவசதி இருத்தல் அவசியமாகும். நிரந்தரமான அல்லது தற்காலிகமான வகுப்பறைகள் ஒன்றிலிருந்தொன்று வேறாக்கப்பட்டு அமைந்திருத்தலும் வேண்டும். பிள்ளைகள் வகுப்பறைக்குள் அங்குமிங்கும் செல்வதற்கு இடவசதியிருத்தல் முக்கியமானது. அலங்காரமாக நிறமூட்டிய கதிரையும், மேசையும் பிள்ளைகளின் உள்ளத்தைக் கவரும். வகுப்பறையின் வெளிப்பகுதியில் சுதந்திரமான செயற்பாட்டிற்கான வசதிகள் வழங்கப்பட வேண்டும். ஊஞ்சல், சறுக்கு பலகை, சீசோ போன்ற உபகரணங்கள் விளையாட்டு மைதானத்தில் இருக்க வேண்டும். கட்டடம் பாதுகாப்பானதாய் இருப்பது மிக முக்கியம். பிள்ளைகள் வெளியே போகாமல் இருப்பதற்கு உதவியாகப் பாதுகாப்பான ஒரு வாயிற்கதவு (Gate) இருத்தல் வேண்டும்.

வகுப்பறையின் சுவர்களுக்கு யன்னல், கதவுகள் இணைக்கப்பட்டிருப்பின் வெறுமையான சுவரின் அளவில் அவை இருத்தல் மிக முக்கியம். பிள்ளைகளின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்த இடவசதி போதுமானதாக இருத்தல் வேண்டும்.



உரு 11.10

பிள்ளையின் தேவைக்காக, இருக்கும் வசதிகளுடன் குளியல் அறையும் மலசலகூடமும் இருத்தல் வேண்டும். பிள்ளைகள் பாடசாலைக்குக் கொண்டு வரும் பை (Bag), சாப்பாட்டுப்பெட்டி, நீர்ப்போத்தல் என்பனவற்றைத் தொங்க விடுவதற்காக அலங்காரமாகத் தயாரிக்கப்பட்ட ஏந்தானங்கள் இருத்தல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, பகல் பராமரிப்பு நிலையங்களாகத் தொழிற்படும் சந்தர்ப்பங்களில், சமையலறைக்குச் சமமான அறையொன்றைத் திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும். சில வேளைகளில் பிள்ளைகளுக்கு உணவு இந்நிலையங்களிலேயே வழங்கப்படும். அதற்கான வசதிகளைக் கொண்ட அறை ஒன்றும் இருத்தல் வேண்டும்.

பிள்ளை ஓய்வாக இருப்பதற்கும் நித்திரை செய்வதற்கும் ஏற்ற வசதிகள் இந்நிலையத்திலே இருக்க வேண்டும். குழந்தைக் கட்டில் இதற்கு வசதியாயிருக்கும். தலையணை, மெத்தை என்பன வழங்கப்பட வேண்டும். இவ்வறையில், பிள்ளைகளின் ஆடையணிகள் வைத்திருப்பதற்கான வசதிகள் இருத்தல், சில வேளைகளில் பிள்ளைகள் உடைகளை மாற்றுவதற்கோ அல்லது சுத்தமாக்கிக்கொள்ளவோ வசதிகள் இருத்தல் நன்று.

நாம் இதுவரை அறிந்து கொண்டது, கலந்துரையாடியது, இந்நிலையத்தின் கட்டமைப்பையும் பௌதிக வசதிகளையுமேயாகும். நாம் இப்போது மனித வசதிகள் பற்றியும் பார்ப்போம்.

பகல் பராமரிப்பு நிலையத்தில் பிரதானமாக பெண்மேற்பார்வையாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். அவரைவிட மேலதிகமாக பிள்ளைகளைப் பாதுகாக்க சேவையாளர் குழு ஒன்றும் மேற்கூறப்பட்ட செயற்குழுவுடன் இருத்தல் அவசியம். பிள்ளைகள் திடீரென நோய்வாய்ப்படின் சிகிச்சை அளிப்பதற்கு தாதி ஒருவர் இருத்தலும் மிகப் பொருத்தமானதாகும். அவ்வாறின்றேல், அது பற்றிய விசேட அறிவுடைய போதுமான சேவகிகள் இருத்தல் வேண்டும்.

இச்செயற்குழுவிலுள்ளவர்கள் ஏதாவது பயிற்சி ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். விசேடமாக, பிள்ளை அபிவிருத்தி, பிள்ளை உளவியல் என்ற கற்றல் செயற்பாடுகளிலும் நுட்பத்துறைகள், ஆடுதல், பாடுதல், நடித்தல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருத்தல் முக்கியமாகும்.

பிள்ளைகளின் சுயவிபரம் பற்றிய அறிக்கை தயாரித்து வைப்பதும் இங்கு செய்ய வேண்டிய இன்னொரு செயற்பாடாகும். பிள்ளையிடம் ஏற்படும் பழக்கவழக்கங்கள் பலதரப்பட்டதாயினும் அவற்றை நன்கு விளங்கிச் செயற்படுவதே பயனுடையதாகும்.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலைய ஆசிரியரிடம் இருக்க வேண்டிய விசேட பண்புகள் பலவாகும்.

- கவர்ச்சிகரமான தோற்றம்
- உணர்வுகளிற்கு மதிப்பளித்தல்
- அன்பு, கருணை காட்டுதல்
- துடிப்பாகச் செயற்படுதல்
- பெற்றோரைப் போன்று நெருக்கமாயிருத்தல்
- பொறுமை
- நெகிழ்ச்சித் தன்மை
- முன்மாதிரியான நடத்தை
- நற்புறவு

நாம் அடுத்து, பிள்ளையின் வளர்ச்சிக்காக பல்வேறு செயற்பாடுகளை ஒழுங்குசெய்யும் முறைகளைப் பார்ப்போம். நிறைவான விருத்திக்காக பல்வேறு பிரிவுகளின் வளர்ச்சியை நன்றாக இப்போது கவனிப்போம்.

உடல் வளர்ச்சி
இயக்க வளர்ச்சி
மொழி வளர்ச்சி
மனவெழுச்சி வளர்ச்சி
சமூக வளர்ச்சி
உள வளர்ச்சி

உடல் வளர்ச்சியானது உயரம், நிறை கூடுதல் மூலம் ஏற்படும். பிள்ளையின் இயக்க வளர்ச்சி, உடல் வளர்ச்சியுடன் சேர்ந்ததொன்றாகும். இதற்காக முதிர்ச்சியும் பயிற்சியும் அவசியம். முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையமொன்றில் இப்பயிற்சியைப் பெறுவதற்காக பல்வேறு முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

பிள்ளையின் உயரம், நிறை என்பனவற்றை அளப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றை அறிக்கைப்படுத்திவைப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். பிள்ளை உணவு உட்கொள்ளல், ஓய்வு, நித்திரை போன்றன பற்றியும் கவனமாயிருப்பது அவர்களிடம் இருக்க வேண்டிய இன்னொரு பண்பாகும்.


உரு11.11

இயக்க வளர்ச்சிக்காக உடல் மென்தசைகளும் பெரிய தசைகளும் செயற்படக்கூடிய முறையில் விளையாட்டுப் பொருள்களும் உபகரணங்களும் இருத்தல் வேண்டும். விளையாட்டு மைதானத்தில் உள்ள விளையாட்டு உபகரணங்கள் ஊஞ்சல், இராட்டினம், சீசோ, சறுக்குப் பலகை போன்றனவும் சிறிய சைக்கிளும் பிள்ளையின் பெரிய தசை இழையங்களின் செயற்பாட்டிற்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்கின்றன.

வகுப்பறைக்குள் நிகழும் பல செயற்பாடுகளினால் பிள்ளையின் மென்தசையிழையங்களின் வளர்ச்சி அதிகரிக்கின்றது. கத்தரிக்கோலால் வெட்டல், மணி கோர்த்தல், பல்வேறு அமைப்புகளில் நிறந் தீட்டல், வாய் சிறிதான பாத்திரங்களுக்குள் நீர் நிறைத்தல், களியினால் (Clay) பல்வேறு அமைப்புகளை உருவாக்கல் என்பன இவற்றிற்குச் சில உதாரணங்களாகும். இவற்றினால் மெல்லிய தசை இழையங்கள் வளர்வதுடன் கண், கை என்பன ஒத்தியங்குவதற்கான பயிற்சியும் கிடைக்கும்.

கண், கை ஒத்திசைவு என்பது மூளையினால் கட்டுப்படுத்தப்படுகின்ற, கையும் விரலும் சேர்ந்தியங்குவதற்குச் சிறப்பாகப் பழக்கப்படும் ஒரு செயற்பாடாகும்.

மேலே கூறப்பட்ட முறையில் செயற்படுவதன்மூலம், பிள்ளையின் மென்தசையிழையங்களுக்குப் பயிற்சி கிடைப்பதால், சிறந்த முறையில் செயற்படுவதற்கும் அதன் மூலம் பாடசாலை சென்றதும் எழுத்துகளை எழுதவும் பல்வேறு ஆக்கங்களைச் செய்யவும் இயலுமாகின்றது.

மொழிவளர்ச்சியை முன்னேற்றம் அடையச் செய்வதற்காக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தில் பல்வேறு செயற்பாடுகள் அதிகளவில் வழங்கப்படுகின்றன. ஆசிரியர் கூறும் கதைகளைச் செவிமடுப்பது அதில் ஒன்றாகும். இவ்வாறான கூட்டான செயற்பாடுகளின்போது ஆசிரியரைச் சுற்றி அரைவட்ட வடிவில் பிள்ளைகள் அமர்ந்து கேட்பர். பிள்ளைகளுக்குத் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த இடமளித்தல், உரத்துச் சத்தமாகப் பாடல், கவி இசைத்தல், பிள்ளைகள் ஒருவரோடொருவர் கதைப்பதற்கு இடமளித்தல், புதிய சொற்களை இனங்காணல் என்பன மூலம் மேலும் மொழிவிருத்திக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுக்கலாம்.

**பிள்ளையின் உளவளர்ச்சியிலும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம் அவதானத்தைச் செலுத்தும்.**

நுண்ணறிவு வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட ஆசிரியர் முயற்சி எடுப்பார்.

உணர்வுள்ள உறுப்புக்களின் செயற்பாட்டின் மேம்பாட்டிற்காக பல்வேறு அமைப்புகள், வரைபடங்கள், சித்திரங்கள் என்பனவற்றை இனங்காணல், பல்வேறு ஓசைகளுக்குச் செவிமடுத்தல், நறுமணம், தொடுகை, சுவை போன்ற உணர்வுகள் என்பவற்றின் மூலம் கற்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.



உரு 11.12

ஆக்கத்திறன் என்பது பிள்ளையின் வளர்ச்சியில் மற்றுமொரு அம்சமாகும். சித்திரம் வரைதல், களிமண்ணில் (Clay) ஆக்கங்கள் செய்தல், நடித்தல், பாடுதல், கதைத்தல் என்பனவற்றுக்குக் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுப்பதால் பிள்ளையின் ஆக்கத்திறன் வெளிப்படும். இவற்றைப் பெரும்பாலும் சுதந்திரமாக ஒரு தனிச் செயற்பாடாகச் செய்ய இடமளித்தால் சுதந்திரமான கருத்துகளை வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடியும்.

எண்ணக்கரு என்பது உளவளர்ச்சியின் இன்னோர் பிரிவாகும். எண்ணக்கரு என்னும் அம்சம் தொடர்பாக பல்வேறு செயற்பாடுகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. பல்வேறு கணித சம்பந்தமான எண்ணக்கருக்கள் இதற்குள் அடங்குகின்றன.

- நீளம், கட்டை என்ற எண்ணக்கரு
- ஒன்றோடொன்று வரைதலும் கோவைப்படுத்தலும்
- பாரம், பாரமின்மை பற்றிய எண்ணக்கரு
- பெரியது, சிறியது பற்றிய எண்ணக்கரு
- பக்கத்திலுள்ளது பற்றிய எண்ணக்கரு
- கனவளவு பற்றிய எண்ணக்கரு
- காலம் பற்றிய எண்ணக்கரு
- ஏறுவரிசை, இறங்குவரிசை பற்றிய எண்ணக்கரு
- அமைப்பு (வடிவம்) பற்றிய எண்ணக்கரு

இந்த எண்ணக்கருக்கள் ஏற்படுவதற்கு நிறங்களைப் பயன்படுத்துவர் விளையாட்டுகளில் ஈடுபடுவதன்மூலம் இதனை மிகவும் இலகுவாக்கலாம். வீடுகளில் எப்பொழுதும் தனியாகவன்றி குழுவாக செயற்பாட்டிலீடுபடுவதன் மூலம் பிள்ளைக்குத் திருப்தி கிடைக்கும்.

மனவெழுச்சி வளர்ச்சிக்காக பல செயற்பாடுகள் ஆக்கப்பட்டுள்ளன. பிள்ளையின் உள்ளத்திலேற்படும் விரும்பத்தக்க, விரும்பத்தகாத உணர்வுகளைக் கட்டுப்பாட்டில் வைப்பதற்கு பழகுவர். மகிழ்ச்சி, சந்தோஷம் ஏற்படுத்தும் விரும்பத்தக்க உணர்வுகளை மிகவும் வளர்ச்சியடையச் செய்யவும் துக்கம், பயம், குரோதம், பொறாமை போன்ற விரும்பத்தகாத உணர்வுகளை தடுக்கும் முறையிலும் செயற்பாடுகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. ஒன்றாக வெளி விளையாட்டுகளில் ஈடுபடும்போது, பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குரிய அவகாசத்தைப் பெறுவர். குழுக்களாகச் சேர்ந்து விளையாடும்போது உற்சாகத்தையும் பெறுவர்.

சமூக வளர்சிக்காகவும் இவ்வாறான குழுச் செயற்பாடுகள் உதவுகின்றன. பிள்ளை சமூகத்துடன் இசைவாகும்போது, தேவையான பல்வேறு பழக்கவழக்கங்களை விளங்கிக்கொள்ளும். பொறுமை, ஒத்துழைப்புடன் செயற்படல், வெற்றி, தோல்வியை ஏற்கும் மனப்பான்மை, பகிர்ந்துகொள்ளல், சட்டத்தை மதித்தல் போன்றவற்றுடன் ஏனையவர்களுக்கு செவிமடுத்தல் போன்ற பண்புகளும் அதிகரிக்கும். அது பற்றிய பல்வேறு செயற்பாடுகள் ஆக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, பிள்ளைகள் ஒன்று சேர்ந்து நடிக்கும்போது பல்வேறு நடிபங்குகளைச் செய்துகாட்டும் வகையில் மேலேயுள்ள பண்புகளை முன்வைக்க முடிகின்றது. ஒருவரோடொருவர் சேர்ந்து மண்ணில் விளையாடல், நீரைப் பயன்படுத்தி விளையாடல், கடை போடுதல், பெரஹரா செல்லல் போன்ற செயற்பாடுகள் இதற்குச் சில உதாரணங்களாகும். அவ்வொவ்வொருவருக்காகவும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம் வசதிகளைச் செய்துள்ளது.

இந்த அனைத்துச் செயற்பாடுகளின் மூலமும் பல்வேறு திறமைகள் வளர்ச்சியடைவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அழகியல் திறமைகளை வெளிப்படுத்துவதற்காகப் பல்வேறு நிகழ்ச்சிகளையும் ஆக்கங்களையும் செயற்படுத்தல் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தின் முக்கிய அம்சமாகும்.




உரு 11.13

இவ்வாறான இடங்களில் நடைபெறும் செயற்பாடு, பாட்டுக் கச்சேரி, நடிப்பு, குழு நடனம் என்பனவற்றின் மூலம், பிள்ளைகளின் முன்வைக்கும்திறன், சபைக் கூச்சத்தை நீக்குதல், சேர்ந்து செயற்படும் திறன் என்பன வளர்ச்சியடையும். மேலும், நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் மூலம் பிள்ளைகள் மகிழ்ச்சியையும் உடல், இயக்க வளர்ச்சியையும் பல்வேறு சமூக வளர்ச்சியையும் கற்க முடிகிறது.



உரு 11.14

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தின் மேலும் முக்கியமான செயற்பாடானது பிள்ளையின் ஒழுக்க வளர்ச்சிக்கு வழிகாட்டலாகும். ஒழுக்க வளர்ச்சி, சட்டதிட்டங்களை மதித்தல், மதப்பற்று என்பன இதன்மூலம் ஏற்படுகின்றன. நாளாந்த மத வழிபாடுகள், தேசிய, கலாசார நிகழ்ச்சிகளின் மூலம் இவற்றை வளர்க்க முடிகின்றது. பெற்றோரையும் மூத்தோரையும் கௌரவித்தல், ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் என்பவற்றுக்கான அடித்தளம் ஏற்படுவதுடன் தமது நடத்தையைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் பழக்கமும் ஏற்படுகின்றது.

மேலும், பிள்ளைக்கு நல்ல பழக்கவழக்கங்களைப் பயிற்றுவிப்பதும் இந்த நிலையத்தின் இன்னுமோர் அம்சமாகும். தானாகவே உணவு உட்கொள்ளல், தனியே உடை உடுத்தல், சிறுநீர் கழித்தல், மலசலகூடத்தைப் பயன்படுத்தல், தனியே நித்திரை செய்தல், தனது பொருள்களைத் தானே பாதுகாத்தல், கையாளுதல் போன்ற வேலைகளில் ஈடுபடும் பழக்கமும் பயிற்சியும் முறையாகப் பாடசாலை செல்வதற்குமுன், பிள்ளைகள், இந்நிலையத்திலிருந்தே ஒழுங்கான முறையில் பழகிக்கொள்கின்றனர்.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தின் இந்த அனைத்து அம்சங்களையும் ஒன்று சேர்த்து பல்வேறு கற்றற் செயற்பாடுகள் ஆக்கப்பட்டிருக்கும். நேர அட்டவணைக்கு ஏற்ப அவை செயற்படுத்தப்படும். அச்செயற்பாட்டுக்கு இடையில் சூழலை ஆய்வு செய்தல், பழகும் திறன், வெளிவிளையாட்டு, கணித எண்ணக்கரு பற்றிய செயற்பாடுகள், சித்திரம், கதை, நடிப்பு, பாட்டு போன்ற பாடங்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன.

பிள்ளை வீட்டுச் சூழலிலிருந்து முதலில் செல்வது முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்திற்காகும். அங்கு பெண் சேவகியும் ஆசிரியையரும் பிள்ளைக்குத் தாயாகச் செயற்படுவது மிக முக்கியமானது. அச்சூழல் மகிழ்ச்சியை ஊட்டும் சூழலாக இருந்தால் பிள்ளை நித்தமும் சமூகமளிக்க விரும்பும். தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகளுடன் வாழ்ந்த சிறுபிள்ளையின் சமூக இசைவாக்கத்திற்கும் ஆரம்ப அடித்தளமாக அமைவது இந்த அபிவிருத்தி நிலையங்களாகும். இதனைவிட, அதிக திறன்களைப் பெறுவதனால் பல்வேறு பாடசாலைகளையும் நோக்கிச் செல்லக்கூடிய ஆளுமையை ஏற்படுத்தவும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையம் பிரதான காரணமாக இருக்கின்றது. அதன் மூலம் பெறும் பயிற்சியும் அனுபவமும், பிள்ளை பாடசாலையில் நன்கு நடந்துகொள்ளவும் அதன் மூலம் சிறந்த பிரசையாகச் செயற்படவும் தேவையான திறன்களை வழங்குகின்றன.



## முன்பிள்ளைப் பருவத்தினரின் பல்வேறு நடத்தைகள்

நீங்கள் இதுவரை முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகள் காட்டும் சாதாரண நடத்தைகளுடன் விசேடமான பல்வேறு நடத்தைக் கோலங்களையும் கற்றிருப்பீர்கள். மேலும், பல்வேறு நடத்தைக் கோலங்களில் செல்வாக்குச் செலுத்தும் பின்னணி பற்றியும் நாம் இப்போது அறிந்துகொள்வோம்.

இவ்வயதில் பிள்ளை துடிப்புடன் செயற்படும் திறனைக் கொண்டிருக்கும். அடிக்கடி விளையாட்டில் விருப்பமேற்படல், மகிழ்ச்சியாகக் காலத்தைக் கழித்தல், பெரியோர்களின் அன்பை அடிக்கடி எதிர்பார்த்தல், வரவேற்பிற்கு ஆசைப்படல், சுயநலப் பழக்கக் கோலங்களைக் காட்டல், அவதானத்தைப் பெற்றுக் கொள்வதற்காகச் செயற்படல் போன்றன சாதாரணமாக வெளிப்படும் பண்புகளில் ஒரு சிலவாகும். சில பிள்ளைகள் விசேடமான நடத்தைக் கோலங்களைக் காட்டுவர். எதிர்த்தல், பயம், முன்வராமை, கதைக்காமை, கோபாவேசமடைதல், முரட்டுத்தனம், விளையாட்டுக்கு விருப்பமின்மை, வெறுப்பு போன்றன பிரதானமாக ஏற்படக்கூடிய நடத்தைக் கோலங்களாகும். இது பற்றிய அறிவும் உங்களுக்குக் கிடைத்திருக்கும்.

நாம் இப்போது இந்நடத்தைக் கோலத்தின் வேறுபாடுகளுக்குக் காரணமான விடயங்கள் பற்றி கவனத்திற் கொள்வோம். பெரும்பாலும், பிள்ளை முகங் கொடுக்கும் சூழல், இதில் பிரதானமாகச் செல்வாக்குச் செலுத்துகிறது.

பிள்ளையின் முதற் சூழல் வீடாகும். வீட்டில் வாழும்போது தாய், தந்தை, சகோதரன், சகோதரிகளின் நடத்தைகள் பிள்ளையிடம் செல்வாக்குச் செலுத்தும்முறை அவர்களின் பல்வேறு விதமான நடத்தைகளுக்குக் காரணமாகின்றது.

இப்போது நாம், பல்வேறு வீட்டுச் சூழல்களைப் பற்றி விளக்கமாகப் பார்ப்போம்.

## சுயாதீனச் சூழல்

இவ்வாறான சூழலைக் கொண்ட வீட்டில் வசிக்கும் பிள்ளை, பெரும்பாலும் விரும்பத்தக்க நடத்தைகளைப் பின்பற்றும். பெற்றோர்களின் ஒற்றுமைப் பாங்கினை பிள்ளைகள் மதிப்பர். பிள்ளைகள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு பெற்றோர்கள் இடமளிப்பதனால் அவர்களின் கருத்துகளை பிள்ளைகள் செவிமடுப்பர். இப்படிப்பட்ட பிள்ளைகள் எப்போதும் வரவேற்கப்படுவர். கடுந்தண்டனையுடைய கட்டுப்பாடுகள் காணப்படாது. வீட்டின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரையும் மதிப்பார்கள்.

பிள்ளையின் பல்வேறு மனவெழுச்சிகளுக்கு இடம் கிடைக்கும். அன்பு, கருணை, பாதுகாப்பு, அரவணைப்பு என்பன குறைவின்றிக் கிடைக்கும். மகிழ்ச்சியுள்ள பிள்ளை, உணவை விரும்பி உண்ணும். உடல் வளர்ச்சி முறையாக ஏற்படும். பல்வேறு இயக்கச் செயற்பாடுகளுக்காக இடவசதி கிடைக்கும். விளையாட்டுப் பொருள்கள் வழங்கப்படும். உணர்வுகளை வெளிக்காட்ட இடமளிக்கப்படும். விரும்பத்தகாத உணர்வுகள் ஏற்படாது. எப்போதும் மகிழ்ச்சியுடன் காலத்தைக் கழிப்பர். இக்காரணிகள் உளவளர்ச்சிக்கு உதவுகின்றன. பல்வேறு கற்றல் செயற்பாடுகளுக்காக பௌதிகப் பொருள்களும் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பெற்றோர், பிள்ளையுடன் நன்றாகப் பழகுவார்கள், கதைப்பார்கள், கதைகள் சொல்வார்கள். இதனால், மொழி வளர்ச்சி அடைகின்றது. வீட்டில் பாதுகாப்பான பிள்ளை, சமூகத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும். அன்பைப் பெற்ற பிள்ளை அன்பைக் காட்டும். சோம்பல்பட மாட்டாது அதனால், சமூக வளர்ச்சி ஏற்படும்.

இவ்வாறான சூழலொன்றில் வளரும் பிள்ளை, முன்வரவும் தலைமைத் துவத்தை ஏற்கவும் எடுத்துக்காட்டாகச் செயற்படவும் ஒத்துழைப்புடன் செயற்படவும் மற்றவர்களிடத்தே பிரசித்தம் பெறவும் இடமளிக்கின்றது.

## சுயாதீனமற்ற சூழல்

வளரும் பிள்ளையின் முழு வளர்ச்சிக்கும் பொருத்தமில்லாத சூழலே இதுவாகும். பெற்றோர் கண்டிப்புடன் இருப்பர். பிள்ளைகளைத் தடுப்பதிலேயே எப்போதும் முன்நிற்பார்கள். பிள்ளையை மதிப்பதற்குப் பின்நிற்பார்கள். பிள்ளையின் கருத்துகளுக்கு இடம் அளிக்காது தண்டனை வழங்குவார்கள். பிள்ளை சொல்வதை செவிமடுக்கமாட்டார்கள். அன்பு, கருணை, பாதுகாப்பு, ஏற்றுக் கொள்ளல், மதித்தல் என்பவற்றுக்குப் பதிலாக பயம், துக்கமான பண்புகள் பிள்ளைகளில் ஏற்படும். பிள்ளை எப்பொழுதும் மகிழ்ச்சியின்றிக் காணப்படுவார்கள். உணவு,

பானங்கள் கிடைத்தாலும், பிள்ளை அவற்றில் அவ்வளவு ஈடுபாடு காட்டமாட்டாது. உள்ளத்தில் மகிழ்ச்சியின்மை ஏற்படும். உணவில் விருப்பு குறையும் உளவளர்ச்சிக்கும் இச்சூழலில் இடமில்லை. கற்பதற்கு ஏற்ற மனமகிழ்ச்சி காணப்படமாட்டாது. எப்பொழுதும் வெறுப்புணர்வை கொண்டிருப்பார்கள்.

மொழிவளர்ச்சி குறைந்து பிள்ளை பெற்றோரைக் கவனியாது, கதைக்கும் சந்தர்ப்பத்தைக் குறைத்துக்கொள்ளும். சமூக வளர்ச்சியும் சிறப்பாகக் காணப்படாது. சமூகத்தில் ஈடுபாடிராது எந்நேரமும் வெறுப்பைக் காட்டுவார்கள். எந்த நேரமும் சிந்திப்பர். ஆனால், கதைக்க மாட்டார்கள். பயத்திலிருப்பர், நகம் கடிப்பர், சில சமயம் முரட்டுத்தன்மையான பண்புகளை வெளிக்காட்டுவர். கோபம் வரும்போது கைக்கு அகப்படுவதை எறிவர். சத்தமிட்டு நிலத்தில் புரண்டு அவதானத்தைத் தம்பக்கம் ஈர்ப்பர். சில பிள்ளைகள் விரும்பத்தகாத பண்புகளை உடையவர்களாயின் படுக்கையை நனைத்தல், விரல் சூப்புதல், நகம் கடித்தல் போன்ற நடத்தைகளை வெளிக்காட்டுவர்.

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம் பிள்ளையின் இரண்டாவது சமூகமாகும். வீட்டிலிருந்து வெளியேவரும் பிள்ளை வளர்வது இவ் விடத்திலேயேயாகும். இக்காரணத்தினாலேயே, நெருங்கிய தொடர்புள்ள செயற்பாடுகளில், ஆசிரியரும் ஏனைய பணியாட்களும் பிள்ளையுடன் மிகவும் அன்பாக ஈடுபடுகின்றனர். வீட்டின் சிக்கலான சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்கும் பிள்ளையை முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையத்தில் சரியாக இனங்காணா விட்டால், பிரச்சினை மேலும் அதிகரிக்கும். பல்வேறு செயற்பாடுகளுக்குப் பிள்ளையைப் பழக்கும்போது இவ்வாறான பிள்ளையில் அதிக கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

பிள்ளையின் செயற்பாடு வெற்றியளிக்கக்கூடியதாக அமைவதற்கு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையம் செயற்படும். அதனால், பிள்ளையின் நடத்தைக் கோலங்களில் முன்பிருந்ததைவிடக் கூடிய வேறுபாட்டைக் காணலாம். மேலும், அங்கே செயற்பாட்டில் ஈடுபடும்போது சமவயதுப் பிள்ளைகளுடன் செயற்படுவதால் ஒத்த நடத்தைகள் வெளிக்காட்டப்படும். வரவேற்பிற்கும் போற்றுதலுக்கும் உட்பட்ட பிள்ளை சிறந்த பண்புக் கோலங்களைக் காட்டும். வீட்டில் ஓரளவு சுயநலத்துடன் காணப்பட்ட பிள்ளை, முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்துக்கு வந்தபின் ஏனைய பிள்ளைகளுடன் சுயநலத்தை இழந்து நட்புறவு கொள்வதுடன், ஒழுக்கம் பேணல், சமய ஈடுபாடு, சமூக வளர்ச்சி நடத்தைகளான நல்ல பண்புகளை வெளிக்காட்டும்.

பிள்ளை வாழும் சமூகம், பொருளாதார வசதி என்பன அவர்களின் நடத்தைக் கோலத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வயதுப் பிள்ளைகள் செவிமடுப்பதன் மூலம் நடத்தைக் கோலங்களை மாற்றிக்கொள்வர். பெரியோர்களுடன் சேரும் பிள்ளை அவர்களின் பல்வேறு நடத்தைகளைப் பின்பற்ற முயற்சிக்கும்.

சமூகமோ அல்லது பொருளாதார மட்டமோ பிள்ளையின் நடத்தைக் கோலத்தில் பெரும்பாலும் செல்வாக்குச் செலுத்துவது, வீட்டில் அவர்களுக்குக் கிடைக்கும் கவனிப்பிலும் பாதுகாப்பிலும் தங்கியிருக்கும். வீட்டில் பிள்ளை மிக அவசியமான ஒரு செல்வம் எனக் கவனித்துச் செயற்பட்டால் அவர்களில் நன்நடத்தைகள் வளர்ச்சியடையும். பிள்ளையைக் கவனியாதுவிடின் நடத்தைக்கோலத்தில் பிரச்சினைகள் ஏற்படும். பிள்ளையின் வயது மட்டத்திற்கேற்ப வசதிகளை வழங்குதல், கட்டுப்பாடுகளை விடச் சுதந்திரத்திற்கு இடமளித்தல், பிள்ளையை பிள்ளையாகக் கவனித்தல் என்பன மிக முக்கியம்.

## பொழிப்பு

- 2 - 5 வயது முடியும்வரை உள்ள காலம், சாதாரணமாக, முன் பிள்ளைப் பருவம் எனப்படுகின்றது. உடல் வளர்ச்சியில் விசேடமான இப்பருவம், மிகவும் செயற்பாடுள்ள பருவம் ஆகும். குடும்பச் சூழலிருந்து முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்திற்குச் செல்லும் இவ்வயதில், மனவெழுச்சி, சமூகமயமாதல் என்பனவற்றால் பிள்ளையினுள் ஒரு கலக்கமே ஏற்படுகின்றது. அதனால், பிள்ளையை முறையாக சமூகத்துடன் தொடர்பை ஏற்படுத்தி வளர்ப்பதன் மூலம், பிள்ளையினுள் ஏற்படும் நிலையற்ற தன்மையைத் தடுக்கலாம்.

- மொழிவளர்ச்சியில் பரம்பரை அலகினதும் சூழலினதும் செல்வாக்கு ஏனைய வளர்ச்சிகளைவிடத் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

- முன்பிள்ளைப் பருவத்தில் பிள்ளையின் சாதாரண வளர்ச்சிக் கோலங்களுக்கு வேறுபட்டதாக ஒழுங்கீனங்களும் சிலவேளை ஏற்படும். மனவெழுச்சி, சமூகம் என்பவற்றின் தாக்கங்களினால் பிள்ளையில் ஒழுங்கீனங்கள் ஏற்படலாம். சில வேளை. இவை நீண்ட காலத் தாக்கத்தை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் தாக்கம் ஏற்படுத்தாதவாறு அவற்றை நீக்கிக்கொள்வதற்கு சிகிச்சை அளிப்பது முக்கியமாகும்.

- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தின் கடமைகள், பிள்ளைகளின் நிலையான அபிவிருத்திக்கு மிக முக்கியமாகின்றது. அங்குள்ள பௌதிக வளமும் மனித வளமும் செயற்பாடுகளும் பிள்ளைக்குப் பொருத்தமானதாக முகாமைத்துவம் செய்யப்படுதல் முக்கியமாகும்.
- குடும்பம், முன்பிள்ளைப்பால் பருவ அபிவிருத்தி நிலையம், சமூகம் ஆகியவை பிள்ளையில் கொண்டுள்ள அவதானிப்பு ஒரு சிறந்த பிரசையை உருவாக்க உதவுகின்றது.

## மதிப்பீடு

1. முன்பிள்ளைப் பருவப் பிள்ளை காட்டும் விசேடமான நடத்தைக் கோலங்களை இனங்காண்க.
2. முன்பிள்ளைப் பருவப் பிள்ளையின் விருத்திச் செயற்பாடுகளை விளக்குக.
3. முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தின் கடமைகளைக் குறிப்பிடுக.
4. முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகளை வளர்த்தெடுக்கும்போது அவதானிக்க வேண்டிய கருத்துகளைப் பற்றிக் கலந்துரையாடுக.

**இப்போது உங்களுக்கு,**

- முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகளின் பல்வேறு வளர்ச்சிச் செயற்பாடுகளை இனங்காண்பதற்கும்
- இந்த வயது எல்லைக்குள் பிள்ளை காட்டும் சாதாரண நடத்தைக் கோலங்களையும் ஒழுங்கீனமான நடத்தைகளையும் இனங்காணவும்
- முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையமொன்றின் தன்மையையும் கடமைகளையும் விளக்குவதற்கும்
- இந்தப் பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களில் பல்வேறுபட்ட தன்மைக்குக் காரணமான விடயங்களை எடுத்துக் காட்டுவதற்கும்

**முடியுமாயிருக்கும்.**